**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி**

முன்னிலை: திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், காரியாபட்டி.

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 06 ம் நாள் சனிக்கிழமை

**புதிய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.351/2025**

**பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.124/2017**

*****

| | |
|---|---|
| குற்ற முறையிடுபவர் | அரசு தரப்பில் ஆவியூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர்,<br>குற்ற எண்.58/2014 |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 | திரு.V.செந்தில்குமார், M.A., B.L., |
| எதிரிகள் | 1). முருகன்,<br>த/பெ. அம்மையாண்டி,<br>டி.கடம்பங்குளம்,<br>காரியாபட்டி தாலுகா.<br>விருதுநகர் மாவட்டம்.<br><br>2).சீனி,<br>த /பெ.முருகன்,<br>டி.கடம்பங்குளம்,<br>காரியாபட்டி தாலுகா.<br>விருதுநகர் மாவட்டம்.<br><br>3) கருப்பணன் (எ) கருப்பு,<br>த /பெ.முருகன்,<br>டி.கடம்பங்குளம்,<br>காரியாபட்டி தாலுகா.<br>விருதுநகர் மாவட்டம். |
| எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் | திரு. B. கணேசன், M.Sc., B.L., |
| சம்பவம் நடந்த நாள் | 30.06.2014 |
| முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த நாள் | 04.07.2014 |
| இறுதி அறிக்கை பதிவு செய்த நாள் | 09.07.2014 |
| இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் | 13.04.2017 |

| | |
|---|---|
| செய்த நாள் | |
| வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | 24.04.2017 |
| எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 30.05.2017 |
| விசாரணை ஆரம்ப நாள் | 24.11.2017 |
| விசாரணை முடிவுற்ற நாள் | 03.06.2026 |
| தீர்ப்பு நாள் | 06.06.2026 |

**எதிரிகளின் விவரங்கள்**

| எதிரிகளின் பெயர்கள் | எதிரிகள் கைது . சரணடைந்த நாள் | பிணையில் சென்ற நாள் | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | முடிவு |
|---|---|---|---|---|
| 1. முருகன், | 16.07.2014 | 16.07.2014 | 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act–ன் கீழ், 2,3 ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) –ன் கீழ், | 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act–ன் கீழ், 2,3 ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) –ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 2. சீனி | 16.07.2014 | 16.07.2014 | | |
| 3. கருப்பணன் ( எ) கருப்பு | 16.07.2014 | 16.07.2014 | | |

இவ்வழக்கு 24.04.2017–ம் தேதியன்று விருதுநகர் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் சி.சி.124/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் சி.சி.351/2025 ஆக எண்ணிடப்பட்டு, 03.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு.V.செந்தில்குமார், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B. கணேசன், M.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

ஆவியூர் காவல்நிலைய காவல் சார்பு ஆய்வாளர் 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act-ன் கீழ், 2,3ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) -ன் கீழ், குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

2(1).இவ்வழக்கின் புகார்தாரர் குடும்பத்திற்கும், 1ம்எதிரியின் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சனை மற்றும் குலதெய்வ பூஜை பெட்டியை எடுப்பது சம்மந்தமாக பிரச்சனை உள்ள நிலையில் கடந்த 30.06.2014ம் தேதி இரவு 7.30 மணிக்கு புகார்தாரர் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது 1ம்எதிரி அரிவாளுடனும், 2ம் எதிரி கடப்பாறையுடனும், 3ம்எதிரி கட்டையுடனும் சென்று புகார்தாரரை பார்த்து தன் அண்ணன் ராசுவின் இறப்பிற்கு உன் புருஷன் தான் காரணம் அவனை வெளியே வரச்சொல் என பிரச்சனை செய்ததால், புகார்தாரர் பயந்து கொண்டு வீட்டிற்குள் ஓட முயற்சித்த போது எதிரிகள் அனைவரும் புகார்தாரரை வழிமறித்து, சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்து, புகார்தாரர் வீட்டிற்குள் ஓடி சென்று கதவை தாழிட்டு கொண்டும் எதிரிகள் மூவரும் சேர்ந்து புகார்தாரரின் வீட்டின் கதவை தட்டி, நீயும் உன் புருஷனும் வெளியே வாங்கடீ, அப்படி வரவில்லையென்றால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி குற்றம் புரிந்துள்ளதாக, ஆவியூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act-ன் கீழ், 2,3ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3.புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த இந்நீதிமன்றம் எதிரிகளின் குற்றச்செயல் குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினார்கள்.

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4.எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தனர். இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. எதிரிகளின் கருத்தும் கேட்கப்பட்டது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டு குறித்து அடிப்படை முகாந்திரம் இருந்த காரணத்தால் 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act–ன் கீழ், 2,3ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) –ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து, வாசித்து விளக்கி கூறி வினவப்பட்டது. எதிரிகள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்தனர். எனவே, அரசு தரப்புச் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5.அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. மேலும் இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 3 நடராஜன் என்பவர் அரசு தரப்பால் நீக்கறவு செய்யப்பட்டுள்ளார்.

6.<u>அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :–</u>

6(1). இவ்வழக்கில் புகார்தாரருக்கும், 1ம்எதிரிக்கும் சொத்து பிரச்சனை இருந்து வந்துள்ள நிலையில் கடந்த 30.06.2014ம் தேதி இரவு 7.30 மணிக்கு புகார்தாரர் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது 1ம்எதிரி அரிவாளுடனும், 2ம் எதிரி கடப்பாறையுடனும், 3ம்எதிரி கட்டையுடனும் சென்று புகார்தாரரை பார்த்து தன் அண்ணன் ராசுவின் இறப்பிற்கு உன் புருஷன் தான் காரணம் அவனை வெளியே வரச்சொல் என பிரச்சனை செய்ததால், புகார்தாரர் பயந்து கொண்டு வீட்டிற்குள் ஓட முயற்சித்த போது எதிரிகள் அனைவரும் புகார்தாரரை வழிமறித்து, சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்து,

புகார்தாரர் வீட்டிற்குள் ஓடி சென்று கதவை தாழிட்டு கொண்டும் எதிரிகள் மூவரும் சேர்ந்து புகார்தாரரின் வீட்டின் கதவை தட்டி, நீயும் உன் புருஷனும் வெளியே வாங்கடீ, அப்படி வரவில்லையென்றால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டியதால் புகார்தாரர் காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1 ஐ பெற்று வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியாக வாக்கு மூலம் பதிவு செய்து பார்வை மகஜர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்து, வழக்கின் சட்டபிரிவு மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 7 தயார் செய்துள்ளார்.

6(2). அசா.1 பொன்னம்மாள் சம்பவத்தால் காயம்பட்ட நபர் ஆவார். இவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 30.6.2014 ம் தேதி மாலை 7 மணிக்கு முருகன் என்பவருக்கும், தங்களுக்கும் சொத்து தகராறு காரணமாக பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தது என்றும், தங்களது குல தெய்வத்திற்கான பெட்டி தங்கள் வீட்டில் உள்ளது என்றும், அதனை எதிரிகள் கேட்டதற்கு தாங்கள் தர மறுத்துவிட்டதாகவும், அப்போது 1ம்எதிரியின் அண்ணன் ராசு என்பவர் இறந்ததற்கு தாங்கள் காப்பு கட்டியிருந்ததால் செல்லவில்லை என்றும், 1ம் எதிரி கத்தி கம்பு, வீச்சருவாளுடன் வந்து தங்கள் வீட்டை உடைத்து, 2ம் எதிரி கம்பியுடன், 3ம் எதிரி உருட்டுக்கட்டையுடன் வந்து பைக், சேர், டியூப்லைட் ஆகியவற்றை உடைத்தார்கள் என்றும், பின்பு தனது சேலையை பிடித்து இழுத்து தன் சட்டையை கிழித்து விட்டார்கள் என்றும், எதிரியின் அண்ணன் இறந்ததினால் உன் வீட்டுக்காரரை தான் கொல்வேண்டி என்று சொன்னார் என்றும், தான் வீட்டிற்குள்ளே இருந்து ஆவியூர் காவல் நிலையத்திற்கு போன் செய்தேன் என்றும், காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் வந்தவுடன் எதிரிகள் ஓடிவிட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6(3).அசா.2 வெள்ளைச்சாமி கண்ணுற்ற சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில் கடந்த 04.07.2014 ம் தேதி எனது வீட்டில் சாமிக்கான பெட்டியை எடுத்து கொண்டு மண்டலமாணிக்கத்திற்கு சென்று சாமி கும்பிட்டுவிட்டு பின்னர் எங்களது ஊருக்கு வந்தோம். ஆஜர் எதிரிகள் எனது வீட்டிலிருந்து பெட்டியை அவர்கள் தரப்பினர்களுக்கு வேண்டும் என்றும், அவர்கள் தான் எடுத்து செல்ல வேண்டும் என்று பிரச்சனை செய்தார்கள். மாலை சுமார் 7.30 மணியளவில் நான் எனது வீட்டில் தூங்கிகொண்டிருந்தேன். எனது மனைவி வீட்டில் வெளியே நின்று கொண்டிருந்தார். அப்போது முருகன், சீனி, கருப்பு ஆகியோர்கள் கையில் கம்பி மற்றும் கடப்பரை, உருட்டு கட்டை ஆகிய ஆயுதங்களுடன் வந்து எனது வீட்டை அடித்து நொறுக்கி விட்டார்கள். எனது மனைவியின் சேலையை பிடித்து இழுத்து சேலையை கிழித்து விட்டார்கள். பின்னர் எனது மனைவி பயந்து கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டார். நான் சத்தம் கேட்டு வெளியே வர முயற்சித்த போது என் மனைவி என்னை வீட்டிற்குள் அடைத்து பூட்டிவிட்டார். வீட்டிற்குள் நானும் எனது மனைவியும் இருந்தோம். எனது இருசக்கர வாகனத்தையும் அடித்து நொறுக்கி விட்டார்கள். எனது அருகில் கொட்டகையிலிருந்த டீப் லைட்டை அடித்து நொறுக்கி விட்டார்கள். பின்னர் நான் தோலைபேசி மூலம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தேன். போலீசார் வந்த பின்பு தான் வீட்டை விட்டு வெளியே வந்தேன். (சாட்சி தன்னிச்சையாக முன்வந்து நான் வெளியே சென்று புகார் அளித்த பின்னர் தான் போலீசார் வந்தார்கள் என்று கூறுகிறார்). எனது மனைவி புகார் மனுவில் சாட்சியாக கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(4).அசா.3 வாழவந்தான் பார்வை மகஜர் சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2014 ம் வருடம் சாமி கும்பிடுவதற்காக கடம்பன்குளத்திற்கு வந்திருந்தேன். அப்போது போலீசார் சண்டை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்து என்னிடம் சாட்சியாக கையொப்பம் பெற்றார்கள்.

பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் **அசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(5).அசா.4 குமார் பார்வை மகஜர் சாட்சி ஆவார். இவர் தனது சாட்சியத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 5 வருடத்திற்கு முன்பு கடம்பங்குளத்தில் உள்ள வெள்ளைசாமி என்பவரின் வீட்டின் அருகே போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். நானும் வாழவந்தான் என்பவரும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆவணத்தில் கையொப்பம் செய்தோம். பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் **அசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(6).அசா.5 வீரணன் (சார்பு ஆய்வாளர்) தனது சாட்சியத்தில், தான் தற்போது பந்தல்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.07.2014 ம் தேதியன்று ஆவியூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 01.07.2014 ம் தேதி 18.30 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் மேத்யூ அவர்களிடம் கடம்பன்குளத்தை சேர்ந்த பொன்னம்மாள் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அவர் பதிவு செய்த CSR No.67/14 ஐ பார்வையிட்டு ஆவியூர் காவல் நிலைய குற்ற எண்.58/14 பிரிவுகள் 341, 354, 427, 506(2) இதச r/w 4 of TNPWH Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அசா.ஆ.4** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(7). மேலும் அசா.5 அவரது சாட்சியத்தில், பின்னர் வழக்கை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றே வழக்கின் சம்பவ இடம் சென்று 14.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் வாழவந்தான் மற்றும் குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அசா.ஆ.5** மற்றும் **மாதிரி வரைபடம் அசா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் பொன்னம்மாள், வெள்ளைசாமி,

நடராஜன், வாழவந்தான், கருப்பையா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6(8). மேலும் அசா.5 அவரது சாட்சியத்தில், பின்னர் வழக்கின் எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் முன் பிணை சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் 09.07.2014 ம் தேதியன்று எனது விசாரணையின் அடிப்படையில் எதிரிகள் புகார்தாரர் வீட்டிற்கு சென்று கொலைமிரட்டல் விடுத்தும், புகார்தாரரின் மனைவியை சேலையை பிடித்து இழுத்த சம்பவம் மட்டும் உண்மையென தெரிய வந்ததால் ஏற்கனவே இருந்த சட்டப்பிரிவான 341, 354, 427, 506(2) இதச r/w 4 of TNPWH Act லிருந்து 341, 354, 506(2) இதச r/w 4 of TNPWH Act ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அசா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது விசாரணையை முடித்து சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் 09.07.2014 ம் தேதியன்று எதிரிகள் மீது 341, 354, 506(2) இதச r/w 4 of TNPWH Act ன் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தபட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரிகளிடம் விளக்கிக் கூறி கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b)–ன் கீழ் வினவிய போது, எதிரிகள் அவை அனைத்தும் பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்று மறுத்தனர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

8. பின்னிட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

9.அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது இவ்வழக்கின் அ.சா.1 சம்பவத்தில் காயம்பட்ட நபர். இவர் சம்பவம் குறித்து தங்களது வாய்மொழி சாட்சியத்தில் சொல்லியுள்ளார். மேற்படி காயம்பட்ட சாட்சிக்கு ஆதரவாக அ.சா.2, அசா.5 –ன்

சாட்சியம் அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

10.எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்ய தவறவிட்டது என்றும், புகார்தாரரான அ.சா.1–க்கும், எதிரிகளுக்கும் இடையே உள்ள சொத்து பிரச்சனை மற்றும் குல தெய்வ கோவில் சம்மந்தப்பட்ட பெட்டியை எடுப்பது பிரச்சினையின் காரணமாக பொய்யான ஒரு புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்று வாதம் எடுத்துரைத்தார்.

11.**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:–**

(அ). 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act–ன் கீழ், 2,3 ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) –ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

(ஆ).ஆம் எனில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன என்பதேயாகும்.

**12.<u>பரிசீலனையும் தீர்வும்</u>:–**

12(1). அரசு தரப்பு வழக்கானது புகார்தாரர் குடும்பத்திற்கும், 1ம்எதிரியின் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சனை மற்றும் குலதெய்வ பூஜை பெட்டியை எடுப்பது சம்மந்தமாக பிரச்சனை உள்ள நிலையில் கடந்த 30.06.2014ம் தேதி இரவு 7.30 மணிக்கு புகார்தாரர் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தபோது 1ம்எதிரி அரிவாளுடனும், 2ம் எதிரி கடப்பாறையுடனும், 3ம்எதிரி கட்டையுடனும் சென்று புகார்தாரரை பார்த்து தன் அண்ணன் ராசுவின் இறப்பிற்கு உன் புருஷன் தான்

காரணம் அவனை வெளியே வரச்சொல் என பிரச்சனை செய்ததால், புகார்தாரர் பயந்து கொண்டு வீட்டிற்குள் ஓடி முயற்சித்த போது எதிரிகள் அனைவரும் புகார்தாரரை வழிமறித்து, சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்து, புகார்தாரர் புகார்தாரர் வீட்டிற்குள் ஓடி சென்று கதவை தாழிட்டு கொண்டும் எதிரிகள் மூவரும் சேர்ந்து புகார்தாரரின் வீட்டின் கதவை தட்டி, நீயும் உன் புருஷனும் வெளியே வாங்கடீ, அப்படி வரவில்லையென்றால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டி குற்றம் புரிந்துள்ளதாக 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act–ன் கீழ், 2,3 ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) –ன் கீழ் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

12(2). அவ்வாறு அசா.1 கொடுத்த புகார் மனுவான அசா.ஆ.1 ஐ பரிசீலனை செய்கையில் புகார் மனுவானது 01.07.2014 ம் தேதியன்று தட்டச்சு செய்யப்பட்டு அதில் அசா.1 கையொப்பம் செய்துள்ளதாக காணப்படுகிறது. மேலும் அ.சா.1 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.2 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தான் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்தனேனா அல்லது புகார் மனு கொடுத்தேனா என்றால் புகார் மனு தான் எழுதிக் கொடுத்தேன் என்றும், தான் தான் புகார் மனுவை எழுதினேன் என்றால் சரிதான் என்றும், தன்னிடம் காட்டப்படும் அசா.ஆ.1 ஆவணம் தான் தான் எழுதிக் கொடுத்த புகார் மனு என்றால் சரிதான் என்றும், எதனால் தான் கொடுத்த புகார் மனு தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் தான் எழுதியதை கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்து உள்ளார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1, 2 சாட்சியங்களின் சாட்சியமானது முன்னுக்கு பின் முரணாக அமைந்துள்ளது. எனவே அ.சா.ஆ.1 புகார் மனுவை அசா.1 கொடுத்தாரா, அ.சா.2 எழுதிக் கொடுத்தாரா அல்லது தட்டச்சு செய்து கொடுக்கப்பட்டதா என்று புகார் மனு குறித்த ஐயப்பாடு எழுகிறது.

12(3). மேலும் அ.சா.1 அவரது முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் மூவரும் தன் சேலையை பிடித்து இழுத்து தன் சட்டையை கிழித்துவிட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.2 அவரது சாட்சியத்தில், தனது மனைவியின் சேலையை பிடித்து இழுத்து சேலையை கிழித்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1, 2 சாட்சியங்களின் சாட்சியமானது முன்னுக்கு பின் முரணாக அமைந்துள்ளது. ஆனால், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 அவரது குறுக்கு விசாரணையில், புகார்தாரரின் சேலை மற்றும் அவர் அணிந்திருந்த ஜாக்கெட்டை அத்தாட்சியில் கைப்பற்றினேனா என்றால் அவற்றை கைப்பற்றவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 ன் சாட்சியத்தை வைத்து பார்க்கும் போது உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் கிழிந்த ஜாக்கெட்டையும், சேலையையும் அத்தாட்சி மூலம் கைப்பற்றியிருக்க வாய்ப்புண்டு. எனவே, அரசு தரப்பு வழக்கில் புலன் விசாரணை அதிகாரி கிழிந்த ஜாக்கெட்டையும், சேலையையும் கைப்பற்றதாதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

12(4). அ.சா.2 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி ஆவார். இவர் தனது முதல் விசாரணையில், தான் சத்தம் கேட்டு வெளியே வர முயற்சித்த போது தன் மனைவி தன்னை வீட்டிற்குள் அடைத்து பூட்டிவிட்டார் என்றும், வீட்டிற்குள் தானும் தனது மனைவியும் இருந்தோம் என்று சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.2 அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சண்டை சம்பவம் நடந்த போது தான் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தேன் என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், தான் தூங்கிக் கொண்டிருந்ததால் தான் சம்பவத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் தான் வெளியே வந்து பார்க்க முற்பட்டேன் ஆனால் தனது மனைவி வீட்டை பூட்டி விட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ன் சாட்சியத்திலிருந்து அவர் சம்பவத்தை சத்தம் கேட்டு தான் பார்த்துள்ளார் என்பதும், வீட்டிற்குள்ளே தான் அ.சா.2 ம் அவரது மனைவி அ.சா.1 ம் இருந்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. எனவே, அ.சா. 2 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக கருத இயலாது.

12(5). மேலும் அசா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் 1ம் எதிரி கத்தி கம்பு, வீச்சருவாளுடன் வந்து தங்கள் வீட்டை உடைத்து, 2ம் எதிரி கம்பியுடன், 3ம் எதிரி உருட்டுக்கட்டையுடன் வந்து பைக், சேர், டியூப்லைட் ஆகியவற்றை உடைத்ததார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா.2 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் எனது மனைவி வீட்டில் வெளியே நின்று கொண்டிருந்தார். அப்போது முருகன், சீனி, கருப்பு ஆகியோர்கள் கையில் கம்பி மற்றும் கடப்பரை, உருட்டு கட்டை ஆகிய ஆயுதங்களுடன் வந்து எனது வீட்டை அடித்து நொறுக்கி விட்டார்கள் என்று அசா.1 ஐ ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்து 13.05.2026ம் தேதியன்று இதச பிரிவு 427 ன் கீழ் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளதால், எதிரிகளுக்கு எதிராக புதிதாக குற்றச்சாட்டு வனைந்தது.

12(6). இதச பிரிவு 427 கூறுவது என்னவென்றால் ஐம்பது ரூபாய் பெறுமான சேதத்தை உண்டாக்குகிறதுக்குரிய தண்டனையே ஆகும். அவ்வாறு 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவு 427 ன் கீழான குற்றச்சாட்டை பரிசீலிக்கையில், அ.சா.1 அவரது புகார் மனுவான அ.சா.ஆ.1ல் எதிரிகள் கதவை அரிவாளாலும், கம்பியாலும், உருட்டுக் கட்டையாலும் கதவை அடித்தும, தன் கணவர் XL டுவிலர் T–67 H 3886 வண்டியை சைடு கண்ணாடியையும், லைட், இன்சின் கால் மிதிக்கு மேல் ஆகியவற்றை அடித்தும், தங்கள் வீட்டின் முன் போடப்பட்டிருந்த கொட்டகையில் கட்டியிருந்து 1டியூப் லைட்டை அடித்து உடைத்துவிட்டார்கள் என்று அசா.ஆ.1 புகார்மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

12(7). ஆனால் அசா.5 புலன் விசாரணை அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் புகார்தாரர் எதிரிகள் அனைவரும் சேர்ந்து தன் வீட்டின் கதவையும், வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்த TVS எக்சல் TN 67 H 3886 பைக், டியூப் லைட், பிளாஸ்டிக் சேர் ஆகியவற்றை சேதப்படுத்திவிட்டு சென்றதாகவும் புகார் தெரிவித்திருந்தேன், ஆனால் உண்மையில் அவர்கள் எந்த பொருட்களையும் சேதப்படுத்தவில்லை, ஏற்கனவே தன் கணவரின் பைக், சேர் ஆகியவறை சேதமாகி

இருந்தது, அதனை சாதமாக பயன்படுத்தி அந்த மூன்று பேரும் சேர்ந்து அதனை சேதப்படுத்தியதாக தவறுதலாக தெரிவித்தேன், தாங்கள் மீண்டும் என்னை விசாரித்தீர்கள் என்று மறு வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.5 அவரது விசாரணையில் அசா.1 மற்றும் அசா.2 முன்னுக்கு பின் முரணாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் முதல் முறையாக விசாரித்த போது மிகைப்படுத்தி கூறியுள்ளார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். அசா.5 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து பார்க்கும் போது ஏற்கனவே அசா.1 ன் கணவரின் பைக், சேர் ஆகியவறை சேதமாகி இருந்ததுள்ளது என்பதும், அதனை சாதமாக பயன்படுத்தி எதிரிகள் தான் அதனை சேதப்படுத்தியதாக தவறாக மிகைப்படுத்தி கூறியுள்ளதும் நம்மால் அறிய முடிகிறது. மேலும் பொருட்களை சேதப்படுத்தியதாக கூறியுள்ள நிலையில் எந்த பொருட்களும் அத்தாட்சியல் கைப்பற்றவில்லை.

12(8).மேலும் அ.சா.1 புகார்தாரர் அவரது புகார் மனுவில் எதிரிகள் பிரச்சனை செய்ததது 30.06.2014 ம் தேதி என்று குறிப்பிட்டு கூறியுள்ளார். ஆனால் அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 04.07.2014 ம் தேதி தானும், தனது கணவரும் ஆவியூர் காவல் நிலையம் வந்தோம் என்றும், தான் நடந்த சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், மேலும் தான் புகார் கொடுத்த தேதி 01.07.2014 ம் தேதி என்றால் சரிதான் என்றும், எதிரிகளுக்கும், தங்களுக்கும் இடையே சொத்து பிரச்சனை சம்மந்தமாக அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது என்று சொன்னால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 சார்பு ஆய்வாளர் சாட்சியத்தின் மூலமும், அ.த.சா.ஆ.1 புகார்மனு 01.07.2014 ம் தேதி பதிவு செய்து அதற்கு CSR No.67/14 கொடுக்கப்பட்டு 04.07.2014 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே சம்பவம் உண்மையிலேயே நடந்திருந்தால் அசா.1 சம்பவம் நடைபெற்ற தேதியன்றே புகார் அளித்திருப்பார், ஆனால் அசா.1 சொத்து பிரச்சனை

காரணமாக பின்யோசனை செய்து எதிரிகள் மீது மிகைப்படுத்தி புகார் மனு கொடுத்திருக்கலாம் என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. மேலும் ஏன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய 4 நாட்கள் ஆனது என்று எந்தவித விளக்கமும் அரசு தரப்பால் அளிக்கவில்லை.

12(9). இவ்வழக்கில் எதிரிகள் தான் புகார்தாரருடன் சமாதானமாக சென்றுவிட்ட படியால் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுமென கு.வி.மு.ச பிரிவு 320–ன்படி மனு தாக்கல் செய்யபட்டது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் சமாதானமாக போகக்கூடிய குற்றம் அல்ல என்பதால் மேற்படி மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. புகார்தாரரும் எதிரிகளும் சமாதானமாக சென்றுவிட்ட நிலையிலும், மீண்டும் அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது தான் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் வெள்ளை தாளில் போலீசார் தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள், அதன் பிறகு கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு ஒரு புகாரை அவர்களே தயாரித்து கொண்டார்கள் என்று பிறழ் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.2 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது தான் தனது வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது வெளியே சத்தம் கேட்டவுடன் வெளியே வந்து பார்த்த போது யாரோ நான்கு நபர்கள் தனது வீட்டின் முன்பு கத்தி கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான் என்றும் யார் தனது வீட்டின் முன்பு கத்தி கொண்டிருந்தார்கள் என்பது தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்று பிறழ் சாட்சியமளித்துள்ளார். எனவே அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகளின் சாட்சியம் நம்பகத்தன்மையுடனும், உண்மைத்தன்மையுடனும் காணப்படவில்லை.

12(10). இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களில் பல முரண்பாடுகள் காணப்படுகிறது. மேலும் அ.சா.1–ன் குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சனை மற்றும் குல தெய்வ கோவில் பெட்டி யார் எடுப்பது என்பது குறித்தும் பிரச்சனை இருந்துள்ள நிலையில் எதிரிகளுக்கு எதிராக புகார் மனுவானது மிகைப்படுத்தி

கொடுக்கப்பட்டுள்ளதா? என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. மேலும், நாம் முன்னரே அ.சா.2 கண்ணுற்ற சாட்சி இல்லை என்று தீர்மானித்துள்ளோம். மேலும் அ.த.சா.ஆ.1 புகார்மனு நிரூபணம் செய்யப்படாத நிலையிலும், உண்மையிலேயே சம்பவம் நடந்ததா? என்ற ஐயப்பாடு எழுந்துள்ள நிலையிலும், எதிரிகள் தான் அசா.1 ஐ வழிமறித்து, சேலையை பிடித்து இழுத்து மானபங்கம் செய்து, பைக், சேர், டியூப்லைட் ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து உயிர் பயத்தை ஏற்படுத்தினார் என்ற எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் பல சந்தேகங்கள் எழுதுள்ளது. மேற்படி சந்தேகத்தின் பலனை அடைய எதிரிகளுக்கு அருகதை உண்டு என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.இறுதியாக,**

13. 1 வது எதிரி இதச பிரிவுகள் 341, 354, 427, 506(2), உ/இ 4 of TNPWH Act–ன் கீழ், 2,3 ம் எதிரிகள் இதச பிரிவுகள் 354, 427, 506(2) –ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

14. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சான்று பொருட்கள் குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

15. எதிரிகள் குவிமுச பிரிவு 437–A/481 BNSS பிரிவின் கீழ் ரூ.10,000/–த்திற்கான சொந்த பத்திரம் அல்லது ஜாமின் பத்திரம் வழங்க வேண்டுமென்றும், இந்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு மேல்முறையீடு அல்லது மனு தொடர்பாக நீதிமன்றம் அறிவிப்பை வெளியிடும்போதும் உயர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும், மேலும்,

மேற்படி பத்திரமானது ஆறு மாத காலத்திற்கு அமலில் இருக்குமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 6–ம் நாள் என்னால் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
காரியபாட்டி.

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | பொன்னம்மாள் |
| அ.சா.2 | – | வெள்ளைச்சாமி |
| அ.சா.3 | – | வாழவந்தான் |
| அ.சா.4 | – | குமார் |
| அ.சா.5 | – | வீரணன் (சார்பு ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | – | பார்வை மகஜரில் உள்ள அசா.3 ன் முதல் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜரில் உள்ள அசா.4 ன் முதல் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | – | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**குறிப்பு:–**

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
4. எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)/ 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.